**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 250/2019**

**வா.சா.1 – யசோதா**

**<u>21–07–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

5. அம்மாசை நாடார் சேனைக்கிழங்கு வியாபரத்தில் அவருக்கு கிடைத்த வருமானத்தை கொண்டு வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல, விவசாயம் தான் செய்தார். பிதுராஜித வகையில் கிடைத்த வருமானத்தை கொண்டு மேற்படி சொத்து வாங்கப்பட்டது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 சொத்துக்களின் கிரைய மறுபயன் என்ன என்றால் அது பூர்வீக சொத்து என்பதால் மதிப்பு தெரியாது.

6. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் பழனிசாமி மற்றும் தர்மபூபதி சாட்சி கையொப்பம் செய்தார்கள் அதனை யார் எழுதினார்கள் என்றால் தங்கவேல் எழுதினார். வா.சா.ஆ.4 உயில் எங்கு வைத்து எந்த தேதியில் யாரால் எழுதப்பட்டது என்றால் கவுந்தப்பாடி பதிவு அலுவலகத்தில் தங்கவேல் மூலம் 07.09.2007 ம் தேதி எழுதப்பட்டது. உயில் ஆவணம் எழுதிய பிறகு அம்மாசை நாடாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் இல்லை. தாவாவில் 3/1 பாகம் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் பூர்வீக அடிப்படையில் சொல்கிறேன்.

7. 28.08.2008 ம் தேதியன்று எழுதப்பட்ட உயில் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2008 ம் தேதியில் தயாரிக்கப்பட்ட உயில் எனக்கு எப்போது மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று தெரியும் என்றால் 2012 ல் எனது தாத்தா

இறப்பிற்கு பின்னிட்டு தெரியும். மோசடியான உயில் என்பதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்தேன். அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அதன் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கோபி நீதிமன்றத்தில் உள்ளது. அம்மாசை நாடார் எனக்கு எழுதிய உயிலை ரத்து செய்து 05.07.2011ல் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை 4 மற்றும் 1 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்துள்ளார் என்றால் தெரியாது.

8. 2011 உயில் உள்ளதை குறித்து பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை மறுத்து பதில் உரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக ஒரு உயில் ஆவணம் எழுதிய பிறகு மீண்டு புதிதாக உயில் ஆவணம் எழுதும் போது பழைய உயிலின் சரத்துக்கள் அடிபட்டுவிடும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக பாத்தியப்பட்டதால் எனக்கு 1/2 பங்கு வேண்டும் என்று எதன் அடிப்படையில் கேட்கிறேன் என்றால் தாத்தா சொத்து என்பதால் கேட்கிறேன். தாவா சொத்தில் திருப்பூரில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கோமதியிடம் கேட்டு வாடகைதாரராக குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

9. எனது தாத்தா இருக்கும்போது என்னை தாவா சொத்தில் குடிவைத்தார், 2009 முதல் தாவா சொத்தில் தான் உள்ளேன். தாவா சொத்தில் நான் குடியிருப்பதால் மட்டும் உரிமை கோரமுடியாது என்றால் தாத்தா சொத்து என்பதால் உரிமை கோருகிறேன். சார்பு நீதிமன்றம் கோபிசெட்டிபாளையத்தில் பாகப்பிரிவினை கேட்டு அ.வ. 11/2013 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன், அது நிலுமைவில் உள்ளது. அம்மனு நிலுவையில் உள்ளதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும்.

10.. எனது தாத்தா தாவா சொத்தில் என்னை குடிவைத்தார் என்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் இல்லை வாய்மொழியாகதான் அழைத்துவந்தார். 05.07.2011 உயில் சாசனம் அடிப்படையில் 4, 1 பிரதிவாதிகள் 5, 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்வதாக சொல்லும் நான் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அறிவிப்பு அனுப்பினேன். எனது உயிலை நிரூபிப்பதற்கு நான் தயாராக உள்ளேன். நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், எனது உயில் ரத்தாகிவிட்டதால் தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.